
வெளியீடு 2

மரங்களின் மகிமை

அல்லது

மனிதனின் முதற் கடவுள்



விவரம் உள்ளே பார்க்க

ஆசிரியர் :
பண்டித-கு. கண்ணையா

விலை
அணா 1

விண்ணப்பம்

அன்புமிக்க வாசகரே!

அட்டையின் முடிவில், யாம் வெளியிடப்போகும் நூற்களிற் சிலதின் சுருக்க விவரங்கள் கொடுத்திருக்கிறோம், அதைக்கொண்டு யாம் எவ்வகையில் நூற்கள் வெளியிட நினைத்துள்ளோம் என்பது ஒருவாறு விளங்கும். இம்முறை வெளியீடுகள் தமிழ் மொழிக்கு எவ்வளவு பயன்தரும் என்பதையும் அறியலாம்.

யாம் வெளியிடும் நூல்களின் விஷயங்கள் எக்கட்சியாருக்கும், சமுகத்தாருக்கும் மதத்தாருக்கும் சார்பு அல்லது எதிர்ப்பற்று, ஆராய்ச்சிக்குப் பயன்தரும் எண்ணத்துடனேயே வெளியிடப்படுகின்றன என்று உறுதிகூறுகிறோம்.

தமிழ் அன்னையின் திருப்பணியாக வெளிவரும் இவைகளுக்கு நீர் துணைபுரிய வேண்டாமா? ஆகவே தயவுசெய்து உமது நண்பர்கள் அனைவருக்கும் இதை எடுத்துக்கூறி அவர்களையும் நமது கழகத்தின் அங்கத்தினர்களாய்ச் சேர்த்துக்கொடுக்க வேண்டுமென்று உம்மை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழன்பர்கள் பெருவாரியாக எம்மை ஆதரித்தால் யாம் இத்திருப்பணியை இன்னும் விரிவான முறையில், அதிக பக்கங்கள் கொண்ட நூற்களாக வெளியிட்டு உதவமுடியுமென்று நம்புகிறோம்.

வேதங்களின் சிறப்பு.

இது மனிதசமுகத்தின் பழம்நூலாகிய வேதத்தில் பொதிந்து கிடக்கும் மனிதப்பொது விருப்பங்கள், இல்லறம், நீதிநெறிகளிற் சிறந்தவைகளைத் திரட்டி முதல் வெளியீடாக வெளியிட்டுள்ளது.

: அங்கத்தினர் ஆகும் விதிகள் :

ரூ. 5 செலுத்துவோர்களுக்குத் துடர்ச்சியாக 100-புத்தகம்
ரூ. 1 செலுத்துவோர்களுக்குத் துடர்ச்சியாக 20-புத்தகம்
ரூ. ½ செலுத்துவோர்களுக்குத் துடர்ச்சியாக 10-புத்தகம்

கீழ்க்கண்ட எந்த விலாசத்திலாயினும் நூற்களைப்பெறலாம்

பண்டித-கு. கண்ணையா	நன்னெறி நூற்கழகம்
106, காளத்தியப்ப	இஞ்ஜினீயர்சுப்பராய
முதலித்தெரு	முதலித்தெரு
சூளை, சென்னை.	வேலூர்.

மரங்களின் மகிமை

அல்லது

மனிதனின் முதற் கடவுள்

ஆசிரியர்

பண்டித. கு. கண்ணையா

வெளியிடுவோர்

நன்னெறி நூற்கழகம், வேலூர்

காணிக்கை

எனைப் பயின்று இன்பமூட்டி இனியவனுக்கிய இன்பத்தமிழ் அன்னாய்! இதோ! இவ்விரண்டாம் மலர் சூடிப் போற்றுகிறேன். நின்றன் திருத்தாள்களின் திருப்பணியில் நினது மக்களனைவரும் என்றனக்குறு துணையாமாறு உள்ளம் கனிவாயாக!..........................

கு. கண்ணையா

முன்னுரை

எத் தேசத்தவராயினும், எம்மதத்தவராயினும் மனிதர்களில் யாரும் வருத்தத்தை வரவேற்பதில்லை. மனிதர்களேயன்றி ஏனைய உயிரினங்களும் எப்போதும் சுகத்தையே விரும்புகின்றன. சுகமே வாழ்க்கையின் குறிகோள். அதை நாடியே உண்ணல், உடுத்தலாதி எல்லாக் காரியங்களையும் மக்கள் புரிகின்றனர். ஆயினும் பலர் சுகத்திற்கு மாறாகத் துக்கத்தைப் பெறுகின்றனர். உண்மையில் தங்கள் காரியங்களின் பயனாய் சுகத்தைப் பெறுவோர் மிகச்சிலரே. இதற்கென்ன காரணம்?

இன்று மனிதசமூகம் தன் உண்மை நெறியை மறந்துவிட்டது. மொழி, கலை, ஒழுக்கம், நாடு, நிறமாதிகளை முன்னிட்டு இன்று மனிதர்கள் பலவேறு பிரிவினர்களாக நினைத்து வருகின்றனர். "வசுதைவ குடும்பகம்" உலகனைத்தும் ஒரே குடும்பம் என்ற மறைமொழியின் மாட்சிமையை மறந்துவிட்டனர். ஒரு நாட்டினர் மற்ற நாட்டினரை, ஒரு மொழியினர் மற்றமொழியினரைத் தங்களுக்கு மாற்றானவர்களென்றும், எதிரிகளென்றும் நினைத்து வருகின்றனர். இதுவே அவர்கள் அடையும் துக்கமனைத்திற்கும் மூலகாரணம்.

மறுபடி என்று உலக மனிதர்களனைவரும் தாங்கள் ஒரே குடும்பத்தினர்கள்தான் என்ற நினைவையடைந்து ஒற்றுமையுடன் வாழ முற்படுவார்களோ அன்றுதான் உலகில் உண்மையான சுகம் நிலவும். உண்மையில் ஆராய்ந்து நோக்குங்கால் முதலில் மனிதர்கள் ஒரே குடும்பத்தினர்களாய்

ஓரேமொழியினராய், ஒரே இடத்தில்தான் வாழ்ந்துவந்த னர் என்றும், இடவசதியைநாடி பலவேறு இடங்களில் சென்று குடியேறிய பிறகே அவர்களுள் இடபேதங்களுக் குத்தக மொழியிலும், கலைகளிலும் வேற்றுமை ஏற்பட்ட தென்றும் தெரிகிறது. மேல்நோக்காக நோக்குபவர் களுக்கு இன்று உலகம் மிக வேற்றுமை கொண்டதாகக் காணப்பட்டாலும் கூர்ந்து நோக்குவோர்களுக்கு இன்றும் அவையனைத்தும் ஒன்ருகவே காணப்படும். இவ்வுண்மை களையெல்லாம் விளக்கிச் சொல்ல இச்சிறுநூல் இடந்தரா தாகையால் இதில் மனிதர்களனைவரும் ஒரே குடும்பத்தின ராகவே இருந்தார்களென்பதை விளக்கிக்காட்டும் பல கொள்கைகளில் ஒன்றை மாத்திரம் சுருக்கமாக விளக்கிக் காட்டியிருக்கிறேம்.

பண்டித. கு. கண்ணையா

மரங்களின் மகிமை

அல்லது

மனிதனின் முதற் கடவுள்

பல்வேறு மொழிகள், பல்வேறு சமூகங்கள் இன்று உலகில் காணப்பட்டாலும் "ஆதியில் மனிதர்கள் இவ்வுலகில் ஒரே இடத்தில்தான் தோன்றினர், அவர்களுக்கு ஒரே மொழிதான் இருந்தது" என்ற உண்மையை இக்காலத்தில் எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆதியில் எந்தவிடத்தில் மனிதர்கள் தோன்றினார்கள். அவர்களுடைய மொழி எதுவாயிருந்தது, அவர்களின் சமுகம் யாதாயிருந்தது? என்ற விடயங்களைக்குறித்து நாம் வேறோர் நூலில் விரிவாக ஆராய்வோம். அவ்வொரே சமுகத்தினர் உலகின் பல பாகங்களிலேசென்று குடியேறியபோது அந்தந்த இடத்தின் நிலை மாறுபாடுகளுக்குத்தக மாறுதலடைந்து பல சமுகத்தினர்களாகவும், பல மொழியினர்களாகவும் மாறினர் என்ற விடயத்தையும் நாம் பிறகு ஆராய்வோம். இதில், அவ்வாதிமனிதர்கள் முதன் முதலில் எதைக் கடவுளெனக் கண்டனர், ஏன் கண்டனர், அந்நினைவு இக்காலச் சமுகத்தினர்களுக்குள்ளும் காணப்படுகின்றதா என்பதைக் குறித்து மாத்திரம் ஆராய்வோம்.

ஆதிமனிதர்கள் அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான உணவுகள் நிறைந்த இடத்திலேதான் தோன்றியிருக்கவேண்டும். இல்லையென்றால் மனிதசமூகம் அழிந்துவிட்டிருக்கும். மனிதர்களின் இயற்கைஉணவு காய், கனி, கிழங்குகள் என்று சொல்லவேண்டியதில்லை. ஆகவே ஆதிமனிதர்கள் மரங்கள் வளரமுடியாத கடற்கரைகளிலோ, வெள்ளப் பெருக்குக்கொண்ட நதிக்கரைகளிலோ தோன்றியிருக்கமாட்டார்கள். காய் கனிகள் மனிதமுயற்சி

யில்லாமலே அதிகமாய் விளையக்கூடிய காடுகளில் தான் ஆதியில் மனிதர்கள் தோன்றி யிருக்கவேண்டும்.

உலகம் நிமிடத்திற்கு நிமிடம் மாறிக்கொண்டிருக்கிறது. பழங்கால உலகத்திற்கும் தற்கால உலகத்திற்கும் மிகப்பெரிய மாறுதல் காணப்படுகிறது. அக்காலத்தில் நீர் நிலைகளாய் இருந்த பல விடங்கள் இன்று நிலமாகவும் நிலங்கள் பலது நீர்நிலைகளாகவும் மாறி இருக்கின்றன. அக்காலத்தில் இல்லாத பல மலைகள் தோன்ற, இருந்த பல மலைகள் மறைந்துவிட்டன. அக்காலத்திய எரிமலைகளிற்பலது தற்காலம் சூடுதணிந்ததாய்க் காணப்படுகின்றன. மனிதன் உலகில் தோன்றியகாலத்தில் உலகம் அடிக்கடிப் பெரும் புயல்களாலும், பூமியதிர்ச்சிகளாலும், எரிமலைகளின் குழம்புகளாலும் நீர் நிலைகளின் பெருக்குகளாலும் மாறுதலைபடைந்து கொண்டிருந்தது. அதற்குக் காரணத்தை வேறோரிடத்திற் கூறுவோம். ஆகவே இக்காலத்தில் மனிதர்கள் தங்கள்வாழ்க்கைக்காகச் செய்துகொள்ளும் பாதுகாப்புகளைவிட அக்காலமனிதர்களுக்கு அதிகப் பாதுகாப்புகள் தேவையாயிருந்தன. ஆனால் அக்கால மனிதன், இக்காலத்தவன் பெற்றிருக்கும் பாதுகாப்புகளில் நூறில் ஒரு பங்குகூடப் பெற்றிருக்கவில்லை.

இயற்கையாய் மரங்களில் விளையும் காய் கனிகளையே உணவாக உண்டுவந்த ஆதிகாலமனிதன் அம்மரங்களின் இயற்கை நிழலையே தன்வீடாகக் கொண்டிருந்தான். மரங்களின் அடர்ந்த கிளைகளே அவன்வீட்டின்கூரை, உதிர்ந்த இலைகளே அவன் மெல்லிய படுக்கை. தன் கூடவே இயற்கையாய்த்திரிந்து விளையாடிக்கொண்டிருந்த கொடிய மிருகங்களின் கொடுமையிலிருந்து தப்புவதே ஆதிமனிதனுக்கு அனைத்திலும் மேலான உழைப்பாயிருந்தது. காற்று, நெருப்பு, வெள்ளம்முதலியவைகளைக்கண்டு அஞ்சி, அவைகளின் வேகத்திலிருந்துத் தன்னையும், தன்மனைவிமக்களையும் காப்பாற்றிக்கொள்ள அவன்செய்தமுயற்சிகள் அளவிடமுடியா.

இயற்கையின் தன்மைகளைச் சிறிதும் பகுத்துணர முடியாதிருந்த ஆதிமனிதன் அவைகளைத் தனக்கு மேற்

பட்ட, தன்பால் கோபங் கொண்டு அழிக்கவந்த சக்திகள் (தற்காலத்தின்படி தேவதைகள்) என எண்ணலானுன். அவைகளின் கோபங்களை விலக்குவதற்காகத் தான்நினைத்த படி அவைகளுக்கு வழிபாடுகள் செய்யத்துடங்கினுன். அந்நிலையை இன்றுகூட காடுகளில் தற்கால சீர்திருத்தங்கள், முன்னேற்றங்கள் யாதாலும் பாதிக்கப்படாமல் வாழும் மக்களிடைக் காணலாம். அவர்களின் தேவதை தான் வனதேவதை. காடுகளுக் கருகாமையில் வாழும் பட்டணவாசிகள்கூட காடுகளுக்கு ஏதாயினும் காரியத்தை நாடிச் செல்லவேண்டுமானுல் முதலில் வனதேவதைக்குப் பூசைசெய்துவிட்டுப் போகின்றுர்கள்.

காற்று, நெருப்பு முதலிய இயற்கைத் திறன்களைத் தன் எதிரிசக்திகள் அல்லது தேவதைகள் என நினைத்த ஆதிமனிதன், தன் உயிருக்கு உறுதி உண்டாக்கும், உணவுகளையளித்துக் காப்பாற்றும் கனிமரங்களைத் தன் அன்புக் குறிய தேவதைஎன நினைத்து வழிபட்டிருப்பானென்பதில் என்ன ஐயம்? இத் தீயதேவதைகள் நினைவை இன்றுவரைத் தோன்றிய எல்லா மதநூல்களிலும் பேய், பிசாசு, பூதம், சாத்தான் என்ற பலவித பெயர்களில் காணலாம். ஆகவே மனிதன் தன் அன்புக்குறிய தெய்வமாய் முதன்முதல் வழிபடத்துடங்கியது மரத்தையே. மரமே மனிதனின் முதல் தெய்வம்.

நாளா வட்டத்தில் இதுவரை தனக்கு இயற்கைத் துணையாய் இருந்துவந்த மரத்தின் இலைகளைக்கொண்டும், கிளைகளைக்கொண்டும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள மனைகளை யமைக்கத் தெரிந்து கொண்டான். மனிதனின் முதல் வீடு இலைகளாலான (பர்ணசாலா) குடிசையே. பிறகு தன் மனைவி மக்கள் சுற்றத்தார் அனைவருக்கும் இருக்க இடம்தேடி தான் வசித்துவந்தகாட்டின் மத்தியில் சில மரங்களை அப்படியே தன் உணவுக்காக விட்டு வைத்து மீதி மரங்களை வெட்டி இடமுண்டாக்கி, வெட்டிய மரங்களைக்கொண்டு பல குடிசைகளை யமைத்துக் கொண்டான். இப்பல குடிசைகள் சேர்ந்த நிலையைத்தான் இன்று கிராமங்

கள் என்று அழைக்கிறோம். உழவுத் தொழிலை மனிதன் கற்றுக் கொண்டபின், தன்னூரின் மத்தியில் விட்டு வைத்திருந்த பல மரங்களையும் வெட்டி ஞாபகத்திற்காக ஒரே மரத்தை மாத்திரம் விட்டுவைத்து வழிபட்டு வந்தான். இந்நிலையை இன்றுகூட நமது நாட்டுப்புரங்களில் காணலாம்.

உலகின் எல்லா பாகங்களிலும் ஒரே வகை மரங்கள் பயிராவதில்லை. சில இடங்களில் வளரக்கூடிய மரங்கள் வேறு சில இடங்களில் வளருவதில்லை. ஆகவே ஆதியில் ஒரே குடும்பத்தினராய் இருந்த மனிதர்கள், உணவை நாடியும், குடியிருப்பு வசதியை நாடியும் உலகின் பலவேறு இடங்களில் சென்று குடியேறிய போது அவ்வவ்விடத்தில் விளையும் மரங்களைத் தங்கள் தெய்வமாக வழிபடத் துடங்கினர். பலவிடத்து மக்கள் ஒன்று சேரும்போது அவரவர்கள் வாழுமிடத்தில் விளையும் மரங்கள் இன்னவை என்று குறிப்பதற்காக வேண்டி தாங்கள் வழிபட்டு வந்த மரத்தேவதையின் புத்திரர்கள் அல்லது வம்சத்தினர் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளலாயினர் அன்றி தங்கள் ஊர் அல்லது இடம் இன்னது என்று குறித்துச்சொல்வதற்காகவும் தாங்கள் வழிபட்டு வந்த மரக்கடவுளின் பெயரையே சொல்லலாயினர். இந்தியாவுக்கு ஜம்புத்வீபம் என்று பெயர் உண்டு என்பதை அறிவோம். இந்தியாவில் நாகமரங்கள் அதிசமாய் வளர்ந்து வந்தன அக்காலத்தில். இதைக்கொண்டே அப்பெயர் இதற்கு ஏற்பட்டது. ஜம்பு என்றால் நாகப்பழம் என்று பொருள். சால்மலித்வீபம் என்றால் வேலமரங்கள் நிறைந்த ஊர். திருவேலன் காடும் அப்படியே, குஸத்வீபம்–தர்ப்பைப்புல் விளையுமிடம் (குஸம்-தர்ப்பை). அரசூர்–அரசமரங்கள் நிறைந்த இடம். துளசிங்கபுரம்-துளசிச்செடிகள் அதிகமாய் விளையுமிடம். கரும்புவிளையும் ஊரினர் இக்ஷ்வாகு வம்சத்தினர் (இக்ஷு-கரும்பு). சோமம் என்ற கொடி அதிகமாய் விளையும் ஊரினர் சோமயாதிகள். சந்தனமரங்கள் விளையும் ஊரினள் சந்தனுவதி. தாமரை நாட்டினள் கமலா (கமலா-தாமரை). புஷ்பவல்லி, தாமரைக்கண்ணி, பூங்

கொடியாள், பத்மா (தாமரை), துளசம்மாள் முதலிய பெயர்களும் இதைக் குறிக்கும்.


உழவுத்தொழில் தெரியாமையால் மரங்களில் தானுக விளையும் உணவு சிலசமயம் ஊர் வாசிகள் அனைவருக்கும் போதாமையினுல் சிலர் சில தினங்கள் வரை உணவின்றிக் கிடக்க அவர்கள் உடலம் வாடிவதங்கிப் போவதையும், பல தினங்கள் உணவின்றியே கிடக்கும்போது உயிர் போய்விடுவதையும் கண்ட ஆதிமனிதன், மனிதர்களின் உயிர் மரங்களிருந்துதான் வருகின்றதென நினைக்கலானுன். ஆகவே மரங்களை உயிர் கொடுக்கும் தெய்வங்களாக மனிதன் நினைத்து வந்தான். மரங்கள்தான் உயிருக்கு இருப்பிடம் என்பதை விளக்கிக்காட்டத்தான் பிணங்களை எடுத்துச் செல்லும்போது சிலமரங்களின் கிளைகளை இன்றும் இந்தியாவில் பிடித்துச்செல்கின்றனர். மேலும் பிணத்தைப் புதைத்த பிறகு அவ்விடத்தில் மேலே ஏதாவதோர் செடியைப் பயிரிடும் பழக்கம் இன்னும் இருந்துவருகிறது. இதுவும் மரங்களே உயிர் என்பதை விளக்கிக்காட்டுவதே. இப்பழக்க வழக்கங்கள் பழங்கால ஈஜிப்ட் முதலான தேசங்களிலும் அநுசரிக்கப்பட்டு வந்ததென்று அவர்கள் சரித்திரங்களால் தெரிகிறது. மரங்கள் சிலகாலம் மழையில்லாமையால் வாடிவதங்கித் தங்களுக்குப் பழங்களைக்கொடுக்காமல் இருப்பதையும், மழைபெய்தபோதே அவைகள் தளிர்த்துப் பூத்துப் பழமளிப்பதையும் கவனித்தபின் மரத்திற்கு உயிர் மாரி (மழை) யிலிருந்து வருவதாக நினைத்தனர். ஆகவே மரத்துடன் மழையையும் பின்னுல் வழிபடத் துடங்கினர். மழையின் மூலமாய் மரத்தில் வந்து, அதன் மூலமாய்த் தங்களை உயிர்ப்பிக்கும் உயிரைச் சிலர் ஆண் தன்மை கொண்டதாகவும், சிலர் பெண் தன்மை கொண்டதாகவும் நினைத்து வழிபட்டனர். தமிழர்கள் உயிர் பெண் தன்மையது எனக் கண்டவர்கள். அதனுல் தங்கள் மரக் கடவுளை, மரத்தாய் எனவும் அதற்குயிரளிக்கும் மழைக் கடவுளை மாரித்தாய் (மாரி-மழை) எனவும் நினைத்து வழிபடலாயினர். மாரியம்மன் வழிபாடு இன்னும் தமிழ்நாட்

டில் நிலவுகிறது. இம்மாரியம்மைதான் ஆங்கிலத்தில் மேரியம்மை (Mariam) யாகி கிருஸ்வைப் பிறப்பித்தது. கிருஸ்து என்றபதம் கறிசித்து என்று பிரியும், கறி என்ருல் கருமை, சித்து என்ருல் புதுமைக்காரியங்களைச் செய்தல் என்று பொருள். ஆகவே கிருஸ்து என்ருல் புதுமைக் காரியங்களைச் செய்யும் கருமை என்று பொருள். மாரியம்மை பிறப்பித்த இக் கருமை, மேகமாயிருக்க வேண்டுமென்று சொல்ல வேண்டுமா? ஏனென்ருல் மாரி (தண்ணீர்) யம்மையுடன் சூரியத்தந்தை கூடும்போது அதனுல் உண்டாவது மேகமாம் கருமை மகன் அல்லவா? அதனுல் தான் மேரியம்மை மணுளனின் நேர் சம்பந்தமின்றி (சூர்ய கிரணங்களால் அல்லது தேவதூதர்களால்) மகனைப் பெற்ருள் என்று சொல்வது. கன்னிமேரி கிருஸ்துவைப் பெற்ற உண்மை இதுதான். மாரியம்மையின்மகன் கருமை மேகம் என்றுகண்ட இந்நிலை இன்றுகூட உலகின் எல்லா மதங்களிலும் காணப்படுகிறது. வடநாட்டினரின் க்ருஷ்ணன் (கருமையான்), அரேபியாவின் காபாக்கல் (கருமையானது), மாத்வர்களின் கருப்பொட்டு, கரீம் என்ற இஸ்லாமியப்பெயர், அலர் மேலு (அல்—கருமை), அல்லாசாமி (கருப்பு உடற்கடவுள்) அல் குதா (கருப்பாண்டவன்), கருப்பண்ணசாமி, ப்ளேக்கி (Black ; ப்ளேக்—கருப்பு) துரை முதலிய எல்லாம் இம்மேகவழிபாட்டுண்மையை நிலைப்படுத்துவனவாகும். மர்டு (Martu) என்ருல் அஸ்ஸீரியா தேச பாஷையில் மகள் என்று பொருள்; மர்த்தா (மாரித்தாய்) அராபிக் மொழியில் திருவாட்டி என்று பொருள்; மரீனு (Myrina) என்பது ஆசியாமைனரில் தாய்க் கடவுளின் பெயர். மரோடி என்பது கோண்ட் ஜாதியார்களின் கடவுள். உலகெங்ஙனும் இம்மரத்தாய், மாரித்தாய் வணக்கம் இருந்தது என்பதற்கு இவைகள் போதிய சான்றுகளாகுமென நினைக்கிருேம்.

மரத்தைக் கடவுளாய் வழிபட்டனர் என்பதற்கும் போதிய சான்றுகள் உளது. இன்றுகூட தமிழ் நாட்டுப் பெண்மணிகள் குழந்தை யில்லாவிட்டால் அரசமரத்தைச்

சுற்றி வலம்வருவதைக் காண்கின்றோம். நாட்டுப் புரங்களில் பழைய பெரிய மரங்களுக்கு பூசைகள் புரிவதை இன்றும் காணலாம். புத்தர் பிரானுக்கு அறிவு விளக்கத்தைக் கொடுத்ததும்போதிமரமே யல்லவா? ஆதாம் ஏவாளுக்கு அவர்களின் நிலையை உணர்த்தியதும் இதே போதி (அறிவிக்கும்) மரமேயல்லவா? உலகை உண்டாக்கத் தோன்றிய கமல யோனி (ப்ரம்மாவின் பெயர்; கமலம்—தாமரையை பிறப்பிக்கு மிடமாய்க் கொண்டவன்), ஆலிலைமேல் பள்ளி கொண்ட ஆண்டவன் தொப்புளிலிருந்து வந்த தாமரையிலையி லல்லவா தோன்றினான்? நமதுசிலவீடுகளில் காலையில் எழுந்ததும் வீட்டின் மத்தியில் இதற்கெனப் பயிரிட்டிருக்கும் துளசிச் செடியை வலம் வந்து வணங்குகிறார்கள். மகம்மதுநபி பிறந்த குரைஷ் (Koreish) ஜாதியினர் வெகு காலம்வரை ஓர் வகை பனைமரத்தை வழிபட்டு வந்தனர். அரேபியர்கள் சாமுர்ச் (Samurch) என்ற ஓர் வகை மரத்தை அஜ (Aza)என்ற கடவுளாக வழிபட்டு வந்தனர். யூதாவின் (Judah) மனைவி தாமர் (Tamar) என்பது மரப்பெயரே. (தாமர் என்றால் ஹிப்ரு பாஷையில் பனைமரம் தமாலம் என்பது சமஸ்க்ருதம்). வான்ஜி (Wanzey) எனும் ஒருவகை மரத்தை அபிசீனியர்கள் வழிபட்டு வந்தனர் (வஞ்சி—தமிழ்ப் பெயர்). பாலஸ் தீனத்தில் (Palestine) சிந்தூரமரம் (Oak) வழிபடப்பட்டது. ஈஜிப்ட் (Egypt) தேசத்தில் பேரீச்சமரம் உயிர் மரமாய் நினைக்கப்பட்டு வழிபடப்பட்டது. தமிழ்நாட்டின் ஆதிகுடிகளென நம்பப்படும் கொலேரியர் (Kolarians) களின் தெய்வம் ரிக்கத் கோவாடி (Rikad—Gowadi) ரிக்க என்றால் மரம், கோவாடி என்றால் தந்தை, ஆகவே அவர்கள் தெய்வம் மரத்தந்தை. பொலினீசியத் (Polynesian) தீவுகளில் கடவுள் மரத்தால் செய்யப்பட்டிருக்கும். திவ்கேளி (Deukeli) என்பது ஸ்காட்லாண்டு தேசக்கடவுள் (திவ்கேளி அவர்கள் பாஷையில் திராக்ஷைமரம்). பைபிளில் சாலமன் (Soloman) தன்கடவுளை மரத்தடியில் விழிப்பிப்பதாக (I Awakened you under apple tree) காணப்

படுகிறது. குரான் மோக்ஷவர்ணனையில் விரும்பிய தனைத்தையும் தரும் மர (நம்நாட்டுக் கற்பகமர)த்தை யார் அறியமாட்டார்கள். சுமேரியா, பாபிலோனியா முதலான பழைய தேசக் கடவுள் உருவங்களில் பெரும்பாலானவை மர உருவங்களே. ட்ருயிட்ஸ் (Druits) என்ற ஆங்கில தேசத்தில் குடியேறிய மக்கள் சிந்தூரமரத்தின் உச்சியின் இருபக்கக் கிளைகளைத் தவிர மற்றவைகளை வெட்டிவிட்டு (வெட்டுண்ட நிலைக்குப் படத்தைப்பார்) அதைக் கடவுளென வழிபட்டு வந்தனர்:—



உ, என்பது அடிமரம்
அ, இ, என்பன இரண்டு பக்க வாட்டக் கிளைகள்
இதில் இ—என்ற வலதுபக்கக் கிளை ஹிஸஸ் (Hesus) என்ற கடவுள், அ—என்ற இடது பக்கக்கிளை பெலனஸ் (Belenus) என்ற கடவுள், உ—என்ற அடிமரம் தரனிஸ் (Tharains); மொத்த முழுவுருவம் தாவ் (Thau), என்றால் கடவுள்.

இந்தக் குறிதான் பிற்கால கிருஸ்தவர்களுக்குச் சிலுவை (Cross) யாக மாறியது. ஆகவே கிருஸ்தவச் சிலுவையும் அவர்களின் மரவழிபாட்டை உணர்த்துவதே.

காடுகளைவெட்டி, மத்தியில் சிலமரங்களை உணவுக்காக விடுத்து, சுற்றிலும் மர உறுப்புகளைக்கொண்டு மனைகளை யமைத்து வாழ்ந்து வந்த மக்கள், தங்கள் மணச்சடங்காதி நற்காரியங்களை யெல்லாம் தாங்கள் வழிபடும் அக்கடவுளர்களின் முன்னிலையிலேயே செய்து வந்தனர். ஏனென்றால் தாங்கள் செய்யும் காரியங்களின் பயன்களை நெடுநாட்கள் நுகர்ந்துவர வேண்டுமானால் தங்கள் மரக் கடவுளர்களின் தயவு அவர்களுக்கு மிகக்கட்டாயமா யிருந்தது. மரக்கடவுள் சிற்றம் (கோபம்) கொண்டு உணவளிக்க மறுத்து விட்டால் தங்கள் மணமாதிச் சடங்குகள் என்னாகும்? அன்றி

மனித வாழ்க்கையில் முக்கியமான மணச்சடங்கை நிறை வேற்றும்போது தங்கள் மரக்கடவுளுக்கே தங்கள் மணமக்களை ஒப்புவிப்பதாகக் கருத்துக்கொண்டு முதலில் மணமகளை அம்மரக்கடவுளுக்கே மணம் செய்வித்து, பிறகுதான் மணமகனுக்கு மணம் செய்விக்கத்துடங்கினர். இப்பழக்கத்தைக்கூட இன்று உலகமெங்ஙனும் பலமாறுபட்ட நிலைகளில் நாம் காணலாம்.

படகி, பௌரி காட்டுஜாதியார்கள் முதலில் பெண்ணை மகிழமரத்திற்கு மணம் செய்வித்த பிறகே மணமகனுக்கு மணம் செய்விக்கின்றனர். முண்டர், குர்மிகள், லோகார், சந்தால் முதலிய ஜாதிகளின் மணமகளும் முதலில் இம்மரத்திற்கு மணம்செய்யப் படுகிருள். பின்ஜிஹ்றயர், கார்வார் முதலிய சிலஜாதியார்கள் முதலில் மணமகளை மாமரத்திற்கு மணமுடிக்கிருர்கள். ஏன் அவ்வளவு தூரம்! இன்று கூட நமது கலியாணங்களில் முதன் முதலில் முகூர்த்தக்கால் நடவில்லையா? மணம் முடிப்பதற்குமுன் மரக்குச்சிக்கு (அரசாணிக்கால்; அரசமரத்தின் கால்) மணம் செய்து வைக்கவில்லையா? எவ்வளவு பெரிய மாடி வீடாயினும் கலியாணம் என்ருல் அதற்காகச் சிறு மணப்பந்தல் (மரங்களால் ஆனது) அமைக்கவில்லையா? மணப்பந்தலில் வைத்துத்தான் மணம்செய்தல் நம் ஆதிகால முன்னோர்கள் கற்றுக்கொடுத்தப் பழக்கம். அதை உலகில் இன்னும் யாரும் மறக்கவில்லை.

இடவசதியை நாடி ஆதிகாலமக்கள் பல ஊர்களில் (கிராமங்களில்) வசித்து வந்தபோதிலும் வெகுகாலம்வரை அவர்கள் தங்களனைவரையும் ஒரே குடும்பத்தினராகவே நினைத்து வந்தனர். ஆதலால் பெண் கொடுக்கல் வாங்கல் முதலிய காரியங்கள் எல்லா ஊர்களுக்கும் வித்தியாசமின்றி நடைபெற்று வந்தன. ஆகவே ஒரு ஊரில் மணச்சடங்கு நடைபெறுகிறதென்ருல் பல ஊர்வாசிகளும் அதில் கலந்து கொள்வார்கள். அப்படிக் கலந்துகொள்ளவரும் போது அவரவர்கள் ஊரில் சிறப்பான மரவகை யெதுவோ அதையும் அம்மணச் சடங்கைச் சிறப்பிப்பதற்காக உடன்

கொண்டு வருவார்கள். அவ்வாறு பல ஊர்களிருந்து வரப்பட்ட பலவகை மரம் செடி கொடிகளைக் கொண்டே ஆதி கால மக்கள் தங்கள் மணமாதி நற்காரியங்கள் செய்யும் இடத்தை அலங்கரித்தனர். அதை யொட்டியே இன்று கூட நமது எல்லா நற்காரியங்களிலேயும் வாழை, கமுகு, மா முதலானவைகளைக்கொண்டு அலங்கரித்து வருகிறோம். மர வகைகளைத்தான் இன்றுகூட நற்காரியங்களின் அழகாக மக்கள் கொண்டுசெய்து வருகின்றனர்.

நாட்போக்கில் ஆதிமனிதர்கள்,இனியும் இயற்கையான மரவுணவுகளையே நாடிநிற்பதாயின் தங்கள் மக்கள் வளர்ச்சியில் அதிக இடையூறு நேருமென்ற நிலையைக் கண்டபோது மரங்கள் எப்படி உண்டாகின்றன? என்பதைக்கூர்ந்து கவனிக்கலானார்கள். பழுத்த பழங்கள் கீழே விழுந்து மண் மூடிப்போன சில தினங்களுக்குப்பின் போதுமான நீரும் மழையின் துணையால் பெற்றபின் முளைவிட்டுத் தளிர்த்து வளர்வதைக்கண்டுத் தானும் அப்படியே செய்து பார்க்கலானான் ஆதிமனிதன். ஆஹா! மனிதசமூகம் உயிர்க்குறுதி பயக்கும் உழவுத்தொழிலைக் கற்றுக்கொண்டது. இயற்கையாய்க் கிடந்த பலவகை புல்லரிசிகளை விதைத்துப் பயிரிட, அவைகள் சிறந்த உணவளிக்கும் கதிர்களாய் முற்றியதைக் கண்டு கரைகடந்த களிப்புக் கொள்ளலானான். இப்புதுமையை எப்படி அனைவரும் கூடிக் கொண்டாடிக் களிக்காமலிருக்கமுடியும்? இதன் பிறகு தங்கள் பயிர்த்தொழிலுக்கு விதைக்க வேண்டிய பருவக் காலத்தையும் பகுத்தறிந்து கொண்டான். முதன்முதல் அறுவடை செய்தபோது ஊரா ரனைவரும் தங்கள் மரக்கடவுளுக்குமுன் தாங்கள் பயிர்செய்தவைகளைப் படைத்து உண்டுகளித்து களியாட்டயரினர். உணவின் கவலையை அறவே போக்கியதும் மரக்கடவுளேயன்றோ! இந்த ஆதிமனிதர்கள் முதன்முதலில் அறுவடைசெய்த நாளைத்தான் நாம் போங்கல் பண்டிகை என்ற பெயரால் கொண்டாடி வருகிறோம். மாட்டுப்பொங்கல் என்பது பிற்காலத்தில் உழவுத் தொழிலுக்கு மாடுகளை உபயோகப்படுத்தத் தெரிந்துகொண்டபோது அறுவடைக்

குப்பின் அவைகளுக்கும் ஓய்வுகொடுக்கச் சேர்த்துக்கொண்டதாகும். மற்ற பண்டிகை தினங்களில் ஊர் வாசிகள் ஒருங்குகூடி களியாட்டயரப் போதுமான சமயம் கிடைக்காத காலத்தில் பொங்கலின் போதாவது ஒருநாள் கூட வேண்டுமென்பதற்காகக் காணும் பொங்கல் (கண்ணுப் பொங்கல்) என்ற பெயருடன் ஓர் நாளைச்சேர்த்து நாம் மூன்று தினங்களாகப் பொங்கல் பண்டிகையைச் செய்து வருகிறோம். இந் நன்னாளில் பெண்மணிகள் கூடிக்குலாவி கும்மியடிப்பது அவ்வாதிமனிதர்கள் தங்கள் மரக்கடவுளின் முன் தங்கள் அறுவடைகளைப் படைத்துக் கொண்டாடிய களியாட்டத்தை நினைவுகூரவே தான். இப்பண்டிகையை வெவ்வேறு பெயரில் உலகமக்கள் அனைவரும் இன்றும் கொண்டாடிக் கொண்டுதான் இருக்கின்றனர்.

குடும்பப் பாதுகாப்பு அதிகமாகி அடிக்கடித் தங்கள் ஊரின் நடுவிலிருக்கும் மரக்கடவுளிடம் சென்று வணங்க முடியாதுபோன காலத்தில் தங்கள் வீடுகளின் மத்தியில் கூரையைத் தாங்க முட்டுக் கொடுத்திருந்த மரக்கட்டையையே மரக்கடவுளாகக் கொண்டு பூசித்துவந்தனர். தூண்களின் தேவையில்லாமல் பலவித தினுசுகளில் வீடுகளைக் கட்டிக்கொண்ட இக்காலத்தவர்கள் வீட்டின் மத்தித்தூண் கிடைக்கப் பெருமையால் வீட்டின் நடுவை நினைவு கூர்ந்து கொண்டு நடு வீட்டுப் பூசை செய்துவருகின்றனர்.

செல்வத்தின் பெருமை தெரியாதும், தேவையில்லாதுமிருந்த அவ்வாதி காலத்தில் தம் மக்களுக்குப் பெற்றோர்கள் கற்றுக் கொடுக்கக்கூடிய தொழில் அல்லது கல்வி ஏதாயினு முண்டென்றால் அது "உழவுத் தொழிலின் மேன்மை தான்" என்று சொல்லவேண்டி தில்லையல்லவா? ஆகையால் அக்காலத்தில் பெற்றோர் பாதுகாப்பி லிருந்து விலகித் தங்கள் சொந்த பாதுகாப்பில் இறங்கவேண்டிதைக் குறிக்கும் திருமண விழாவில் பெற்றோர்கள் மணமக்களுக்கு, இனி அவர்கள் குடும்பத்திற்குத் தேவையான உணவைத் தேடிக்கொள்ளும் உழவுத்தொழிலைக் கற்பித்து வந்தனர். பெரிய நாகரிகத்தில் முதிர்ந்து விட்டதாக நினைத்

துக்கொண்டிருக்கும் இக்காலத்திலும்கூட அநேகர் கலியாணச் சமயத்தின்போது நவதானியங்களைப் பயிரிட்டும், கலப்பையைக்கொண்டு முதலில் மாப்பிள்ளையை தாலிகட்டச்சொல்லியும் சில சடங்குகளைச் செய்து வருகின்றனர். இவைகளெல்லாம் மணமக்களுக்கு உழவின் சிறப்பை உணர்த்த வேண்டி ஆதிகால மக்களால் கையாளப்பட்டுவந்த காரியங்களென்று சொல்லவேண்டுமா?

ஊர்களைப் பலதாகப் பிரித்துக் கொண்டாலும் கொடுக்கல் வாங்கல் முதலிய காரியங்களை யாதொரு வேற்றுமையுமின்றி எல்லா ஊரார்களும் கலந்தே செய்து வந்தனர் என்று முன்பு யாம் சொன்னோமல்லவா? உழவுத்தொழிலைக் கற்றுக் கொண்டபின் இவ்வொற்றுமை இன்னும் வலுப்பட்டது. அறுவடைக் காலத்தில் தங்கள் மரக்கடவுள் முன் ஒருங்குகூடி களியாட்டயரும் வயது வந்த வாலிபர், பெண்களுக்கிடையில் காதல் தோன்றலாயிற்று. "எந்த ஊரார்?, என்ன சாதியார்?" என்ற கேள்விதான் எழுவதில்லையே. ஆகவே அப்பொங்கல் கூட்ட விழாவின்போது காதல் கொண்ட இருவரும் தனித்தவிடங்களுக்குச் சென்றுத் தங்கள் மனம்போல் மகிழ்ந்துபின் மணமுடித்துக் கொண்டனர். மனப்போக்கில் மகிழ்ந்து திரிந்த அக்கால மனிதர்களுக்குள் வேற்றுமைதான் யேது? இப்பழக்கமே, மரக்கடவுள்முன் செல்லும் பழக்கம் மறைந்தபோது தமிழ்நாட்டின் **காதல் மணம்** அல்லது கந்தருவ மணம் என்ற பழக்கமாக மாறியது. இம்மணமுறையும் இன்று உலகெங்஖னும் இருந்து வருகிறது.

உலகத்தில் தலைசிறந்த சமயமாய்க் கருதப்படும் சைவ சமயமும், அதன் சம்பந்தமான லிங்கவழிபாடும் இம் மரக்கவுளின் மாறுபாடாகத் தோன்றியதே என்ற விஷயங்களையும், மனிதர்கள் அனைவரும் இன்றும் ஒரே ஆதிமனிதக் கொள்கைகளையே சிறிது மாறுபட்ட நிலைகளில் கொண்டொழுகி வருகின்றன ரென்பதையும் வேறுபல நூல்கள் வாயிலாக வெளியிடுவோம்.

உலக சமுதாயம் ஒன்றுபட்டுடுக

வெளிவரப் போகும் அரிய சிறு நூற்கள்

பழங்கால இந்திய விக்ஞானம்:—

தற்கால விக்ஞானிகள்தான் கண்டு பிடித்தனரென நினைக்கும் துப்பாக்கி, பீரங்கி, தூலநோக்கி, நுண்நோக்கி, தந்தி, சூடளக்கும் கருவி, விமானம், ரயில் மற்றும்பல சிறந்த பொறி (யந்திரங்) களை பழங்கால இந்தியர் கண்டிருந்தனர் என்று ஆதாரத்துடன் விவரிக்கப்பட்டுள்ளது.

ஈஜிப்ட் வாசிகள் பாண்டியர்கள்:—

ஆங்கில சரித்திரக்காரர்கள், உலகில் மிகப் பழையதென்று சொல்லும் ஈஜிப்ட் நாகரிகம் பாண்டிய நாகரிகமென்பதையும், அந்நாட்டு மக்கள் தமிழ் நாட்டின் பாண்டியர்களே என்பதையும் இதில் ஆதாரத்துடன் கூறப்பட்டிருக்கிறது.

சுதந்திர இந்திய அரசியல்:—

இந்திய விடுதலையால் இந்நாட்டு மக்கள் அடையக் கூடிய நன்மைகளையும், விடுதலைபெற்ற இந்திய அரசியல் எப்படியிருக்கு மென்பதையும் இதில் விளக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழியின் தனிப் பெருமை:—

மற்றமொழிகளிற் காணமுடியாத, தமிழுக்கே உரித்தான சிறப்புகளும், பழங்காலத்தில் தமிழ்மொழி அடைந்திருந்த பெருமையையும் இதில் காணலாம்.

விக்ஞானத்தில் கடவுள் உண்டு:—

தற்கால விக்ஞானிகள் ஆராய்ச்சி செய்து கடவுள் உண்டு என்று கண்டுபிடித் திருக்கின்றனர் என்று இந்நூல் விளக்கிச் சொல்லுகிறது.

வலிவு தரும் உணவு முறைகள்:—

சாதாரணமாகக் குடும்பத்தில் உபயோகிக்கும் பொருள்களைக் கொண்டே சிறந்த வலிவுதரும் பண்டங்களைச் சமைத்துண்ணும் முறைகள் இதில் கூறப்பட்டுள்ளன.

Chithra Printing Works, 96, China Bazaar, Madras 1—2—1941